**தொலைபேசி:**
தொலைபேசி: 1800-2255-529
தொலைப்பிரதி: (65) 6224-2858

**முகவரி:**
The URA Centre (East Wing)
45 Maxwell Road #07-11
Singapore 069118

**மின்-உதவியாளர் (இ-ஹெல்பர்) இயங்கும் நேரங்கள்:**
திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை

**இணையதளம்:**
www.mlaw.gov.sg/pto


MINISTRY OF LAW SINGAPORE | Public Trustee's Office




## சொத்து எனக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

நாங்கள் சொத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு, நீங்கள் http://www.mlaw.gov.sg/eservices/pto/welcome.xhtml எனும் இணையத்தளத்தில் நீங்கள் விண்ணப்பம் செய்ய வேண்டியது அவசியமாகும். பங்குகள், வங்கிச் சேமிப்புகள், இறப்புப் பணிக்கொடை, காப்புறுதிகள் மற்றும் வாகனங்கள் (ஏதேனும் இருந்தால்) போன்ற, இறந்தவருக்குச் சொந்தமான எல்லா சொத்துக்கள் குறித்தும் நீங்கள் உங்களின் விண்ணப்பத்தில் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

அத்தகைய சொத்துக்களில் மசேநி பணம் மற்றும் சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டப் பணம் ஆகியவை உள்ளடங்காது என்பதைக் குறித்துக்கொளுங்கள்.

மசேநி பணத்தைக் கையாளுவது குறித்து நீங்கள் தகவல் தாள் 1 -ஐ வாசிக்கலாம்.

நீங்கள் எங்களின் கணினிவழியான விண்ணப்பப் படிவத்தை அணுகுவதற்கு, உங்களின் சிங்பாஸையும் தயாராக வைத்திருக்க வேண்டியிருக்கும். உங்களிடம் சிங்பாஸ் இல்லையென்றால், நீங்கள் https://www.singpass.gov.sg எனும் இணையத்தளத்தில் உங்கள் சிங்பாஸுக்காக விண்ணப்பம் செய்யலாம். நீங்கள் சிங்பாஸைப் பெறத் தகுதிபெறவில்லை எனில், நீங்கள் http://www.mlaw.gov.sg/pto எனும் எங்கள் இணையத்தளம் வாயிலாக ஒரு புகுபதிகை அடையாளம் மற்றும் மறைச்சொல்லுக்காக விண்ணப்பம் செய்யலாம்.

## நான் உங்களுக்கு என்னென்ன ஆவணங்களை அனுப்ப வேண்டும்?

எங்களுக்குத் தேவைப்படும் ஆவணங்களின் பட்டியலைப் பின்னிணைப்பு A மற்றும் பின்னிணைப்பு B வரையறுக்கிறது. அவற்றில் சில உங்களிடம் இல்லையென்றால், உங்களின் கணினிவழியான விண்ணப்பத்தை நீங்கள் எங்களுக்கு அனுப்பிய பிறகு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து உங்கள் வழக்கு அதிகாரி உங்களுக்கு அறிவுறுத்துவார். இறுதிச் சடங்குகளுக்காகச் செய்த செலவுகளைத் திரும்பப் பெறுவதற்கு, எங்களுக்குத் தேவைப்படும் ஆவணங்களின் பட்டியலைப் பின்னிணைப்பு C வரையறுக்கிறது.
பின்னிணைப்புகள் A, B மற்றும் C ஆகியவற்றின் நகல்களை எங்கள் அலுவலகத்தில் பெறலாம் அல்லது அவற்றை எங்கள் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

எங்களுக்குத் தேவைப்படும் வழக்கமான ஆவண வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. இறந்தவரின் (மரணமடைந்தவர்) மரணச் சான்றிதழ்
2. இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ்
3. இறந்தவரின் திருமணச் சான்றிதழ்
4. பின்னுறுதித் தீர்ப்பாணை (இறந்தவருக்கு விவாகரத்தாகியிருந்தால்)
5. பயனாளரின் பிறப்புச் சான்றிதழ்
6. பயனாளரின் அடையாள அட்டை
7. பயனாளரின் மரணச் சான்றிதழ் (தொடர்புடையதாக இருந்தால்)
8. இறந்தவருடைய பெற்றோர்களின் திருமணச் சான்றிதழ்
9. பெற்றோர்களின் மரணச் சான்றிதழ் (அவர்கள் இறந்துவிட்டிருந்தால்)
10. வாரிசுரிமைச் சான்றிதழ் (முஸ்லிம்களுக்கு மட்டும்)
11. PayNow (பெறுநரின் NRIC உடன் பதிவு செய்யப்பட வேண்டும்),அல்லது நேரடி வங்கி பரிமாற்றத்தின் மூலம் பணம் பெறலாம். நேரடி வங்கி பரிமாற்றத்தின் வழியாக பணம் பெற, நீங்கள் வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகலை சமர்ப்பிக்க வேண்டும் அல்லது வங்கி அறிக்கையின் நகலை சமர்ப்பிக்க வேண்டும். மூன்றாம் தரப்பு வங்கிக் கணக்கிற்கு நேரடி கடன் மூலம் பணம் பெற நீங்கள் தேர்வுசெய்தால், பயனாளி மற்றும் கணக்கு வைத்திருப்பவர்கள் படிவம் 15 எனப்படும் இழப்பீட்டு படிவத்தை செயல்படுத்த வேண்டும். மின்னணு அல்லாத பிற கட்டண முறைகளுக்கு, வங்கிகளால் விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களையும் நீங்கள் ஏற்க வேண்டும், மேலும் இந்த கொடுப்பனவுகள் பரம்பரையிலிருந்து நேரடியாகக் கழிக்கப்படும்.

இறந்தவர் ஒரு முஸ்லிமாக இருந்தால், நீங்கள் www.syariahcourt.gov.sg எனும் இணையத்தளத்தில் வாரிசுரிமைச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.

MINISTRY OF LAW SINGAPORE | Public Trustee's Office

# இறந்தவரின் சொத்தைக் (சொத்துக்கள்) கையாளுதல்

(தகவல் தாள் 2)

*20 அக்டோபர் 2020 அன்று புதுப்பிக்கப்பட்டது*



## இறந்த நபரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு என்னால் பொதுச் சொத்துக்காவலரை ஈடுபடுத்த முடியுமா?

இறந்த நபர் உயில் எழுதியிருக்கவில்லை எனில் மற்றும் அவரது சொத்துகளின் மதிப்பு $50,000 -க்குள் இருந்தால், அச்சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதற்கு பொதுச் சொத்துக்காவலர் உங்களுக்கு உதவலாம். நீங்கள் பொதுச் சொத்துக்காவலர் தலையிடுவதற்காக விண்ணப்பித்தால் மட்டும் போதும். பொதுச் சொத்துக்காவலர் உங்களுக்காகத் தலையிடுவதற்கு ஒப்புக்கொண்டால், உங்களுக்கு வழக்கறிஞர் தேவையில்லை.

உங்களின் அன்புக்குரியவர் உயில் எழுதி வைத்திருப்பதற்கு வாய்ப்பிருந்தால், அவர் அந்த உயிலை எங்கு வைத்திருப்பார் என்பது தொடர்பான தகவல்களை அவர் எங்களிடம் விட்டுச் சென்றிருக்கிறாரா என்பதைச் சரிபார்ப்பதற்கு, எங்களின் உயில்கள் பதிவகத்தில் நீங்கள் ஒரு தேடலை மேற்கொள்ள விரும்பலாம். நீங்கள் http://www.mlaw.gov.sg/pto எனும் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும் ஒரு படிவத்தைப் பூர்த்திசெய்து, தேடல் கட்டணம் மற்றும் தொடர்புடைய சான்றாவணங்களுடன் அதை எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். ஒரு உயில் எழுதப்பட்டிருந்தால், தயவுசெய்து உதவிக்கு உங்கள் வழக்கறிஞரைத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது நீங்கள் சட்ட உதவி பெறத் தகுதிபெற்றால், சட்ட உதவிச் செயலகத்தைத் தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் சட்ட உதவிச் செயலகம் குறித்த மேல் தகவல்களை www.lab.gov.sg எனும் இணையத்தளத்தில் காணலாம்.

உயில் எழுதப்படவில்லை என்று உங்களுக்கு உறுதியாகத் தெரிந்தால், இறந்த நபரின் உடைமைகளைப் பரிசோதிக்கவும். மேலும், அவருக்குச் சொந்தமாக இருந்த சொத்துக்கள் மற்றும் அவற்றின் தோராயமான மதிப்பு குறித்து அறிய உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் சரிபார்க்கவும். நாங்கள் கையாளுடம் சொத்துக்கள்:

- சிங்கப்பூரில் உள்ள வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களில் உள்ள பணம்;
- சிங்கப்பூர் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள பங்குகள்;
- டாக்சிகள் போன்ற வர்த்தக வாகனங்கள் தவிர, முழுத் தொகையும் செலுத்திய வாகனங்கள் (நாங்கள் வாகனங்களை மட்டுமே இடமாற்றும் செய்வோம்);
- அந்நபருக்கு வழங்கப்பட வேண்டிய, ஆனால் இன்னமும் வழங்கப்படாத சம்பளம்;
- பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ள பொருட்கள்;
- அரசாங்க இழப்பீடாக அளிக்கப்பட்ட தொகை; மற்றும்
- வேலைநலன் துணை வருமானத் திட்டத்திலிருக்கும் பணம்

இறந்தவரின் வாரிசு நியமனம் செய்யப்பட்டாத மசேநி பணமானது, சொத்துக்களில் இருந்து தனியாகப் பிரித்து பகிர்ந்தளிக்கப்படும். மசேநி பணத்தைப் பகிர்ந்தளிப்பதற்காக, நீங்கள் பொதுச் சொத்துக்காவலருக்கு மசேநி பணத்தைக் கையாளுவது குறித்த தகவல் தாள் 1 -இன் நகலை எடுத்துக்கொள்ளவும்.

பின்வரும் சூழ்நிலைகளில் எங்களால் செயல்பட முடியாது:

- சொத்துக்களின் மதிப்பு $50,000 -க்கும் அதிகமாக இருந்தால்;
- நிர்வாகக் கடிதங்கள் அல்லது விருப்புறுதி வழங்கலுக்காக ஒரு நீதிமன்ற விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தால்;
- சொத்துக்களுக்கு முரண்பாடான கோரிக்கைகள் அல்லது பயனாளர்களுக்கு மத்தியில் சர்ச்சைகள் இருந்தால்;
- நிலுவையில் உள்ள கடன்கள் அல்லது கடப்பாடுகளைச் சொத்துக்கள் கொண்டிருந்தால்;
- இறந்த நபர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட நிறுவனங்களில் (வெளிநாடு அல்லது உள்ளூர்) பங்குகளை அல்லது பிற ஈடுபாடுகளைக் கொண்டிருந்தால்;
- இறந்த நபர் ஒரு நிறுவனத்தின் அல்லது பிற வர்த்தகத்தின் ஒரு பங்குதாரராக அல்லது தனி உரிமையாளராக இருந்தால் அல்லது ஈடுபாட்டைக் கொண்டிருந்தால்;
- இறந்த நபர் ஒரு வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) வீட்டின் தனிக் குத்தகையாளராக (உரிமையாளர்) இருந்தால் மற்றும் அந்த வீட்டை முழுமையாக அல்லது பகுதியளவு வாரிசுரிமையாகப் பெறுவதற்குத் தகுதிபெறும் ஒரு பிள்ளையைக் கொண்டிருந்தால்;
- இறந்த நபரை உட்படுத்துகின்ற உரிமை கோரிக்கை வழக்குகள் நிலுவையில் இருந்தால்;
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைப் பயனாளர்களாக வாரிசுதாரர் நியமனம் செய்யப்பட்டிருக்கும் காப்புறுதி ஆவணங்கள் இருந்தால்;
- ஒரு பிள்ளையைக் கொண்டு அறக்கட்டளை வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டிருந்தால்; மற்றும்
- டாக்சிகள் போன்ற வர்த்தக வாகனங்கள் ஈடுபட்டிருந்தால்.

இத்தகைய நிகழ்வுகளில், அந்நபரின் சொத்துக்களைக் கையாளுவதற்கான நிர்வாகக் கடிதங்களுக்காக நீங்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் சட்ட உதவி பெறத் தகுதிபெறுகிறீர்கள் எனில், நிர்வாகக் கடிதங்களைப் பெற உதவுவதற்கு நீங்கள் சட்ட உதவிச் செயலகத்திற்கு விண்ணப்பம் செய்யலாம்.
நீங்கள் சட்ட உதவி பெறத் தகுதிபெறவில்லை எனில், நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமித்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

## நீங்கள் எவ்வாறு சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பீர்கள்?

இறந்த நபர் ஒரு முஸ்லிமாக இருந்தால், அவர் கடைப்பிடித்த முஸ்லிம் பள்ளிவாசலுக்கு இணங்கிய முஸ்லிம் சட்ட நிர்வாகத்தின் பிரிவு 112 -க்கு இணங்க நாங்கள் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்போம். ஷரியா நீதிமன்றத்தால் வழங்கப்படும் வாரிசுரிமைச் சான்றிதழில் பயனாளர்கள் பெயர்களும், அவர்களின் வாரிசுரிமைப் பங்கும் பட்டியலிடப்படும்.

இறந்த நபர் ஒரு முஸ்லிம் இல்லை என்றால், ஏதேனும் அசையும் சொத்துக்களின் (உதாரணமாக, வங்கிக் கணக்கில் உள்ள பணம்) பகிர்ந்தளிப்பு அவர் இறக்கும் நேரத்தில் அவர் வசித்த நாட்டின் சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்படும் என்று கூறுகின்ற விருப்புறுதி இல்லா வாரிசுரிமைச் சட்டத்திற்கு இணங்கி நாங்கள் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்போம். (அந்நபர் எங்கு வசித்தார் என்று நாங்கள் குறிப்பிடும் போது, அது அவர் நிரந்தரமாக வசித்து வந்த நாட்டைக் குறிக்கிறது. அது அவரது நாட்டுரிமையை அல்லது முகவரியைக் குறிக்கவில்லை.)

அந்நபர் இறக்கும் நேரத்தில் சிங்கப்பூரில் வசித்திருந்தால், விருப்புறுதி இல்லா வாரிசுரிமைச் சட்டத்தில் உள்ள பகிர்ந்தளித்தல் விதிகளுக்கு இணங்க நாங்கள் அவரது சொத்துக்களைப் பகிர்ந்தளிப்போம்.





## சொத்துக்களை ர்வகிப்பதற்காக நீங்கள் வசூலிக்கும் கட்டணங்கள் எவை?

சொத்துக்களை நிர்வகிப்பதற்காக நாங்கள் வசூலிக்கும் கட்டணங்கள்:

| சொத்துக்களின் மதிப்பு | கட்டணம் |
|---|---|
| முதல் $5,000 -க்காக | 6.50% |
| அடுத்த $2,000 -க்காக | 6.00% |
| அடுத்த $3,000 -க்காக | 4.25% |
| அடுத்த $10,000 -க்காக | 2.75% |
| அடுத்த $30,000 -க்காக | 2.25% |
| | |

ஜிஎஸ்டி உள்பட, இக்கட்டணங்களை நாங்கள் சொத்துக்களின் பணத்திலிருந்து எடுத்துக்கொள்வோம். மேலும், இவற்றை விட்டுக்கொடுக்க முடியாது. நீங்கள் குறைந்தபட்சக் கட்டணமாக $15 -ஐ செலுத்த வேண்டியிருக்கும்.